**ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2015**

---

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளிலும் வீட்டு உதவிகளை வழங்குவதற்காக சுபிரி வாசனா லொத்தர் சீட்டிலிருந்து மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சியிருந்த ரூபா 18,906,285 மற்றும் ஊனமுற்றோருக்கு மானியங்களை வழங்குவதன் பொருட்டு திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த பணத்தில் எஞ்சியிருந்த ரூபா 568,782 தொகை வைப்புக்களாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியிலான மிகை ரூபா 19,475,067 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,449,836 ஆன மிகையொன்றானதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 747,803 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 18,702,033 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாட்டு செலவினம் ரூபா 23,988,766 இனால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அங்கவீனர்கள் தொடர்பாகவும் அவ்வாறானவர்களுக்கு வழங்கப்படக்கூடிய சேவைகள் தொடர்பாகவும் சரியான புள்ளிவிபரங்களைப் பேணிச் செல்லல், ஊனமுற்றதற்கான பிரதான காரணங்களைக் கண்டறிதலும் அவற்றைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான படிமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பித்து பேணிச்செல்லல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 07 செயற்பணிகளை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 120 ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டு, அதற்காக ரூபா 8,837,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததெனினும், அதிலிருந்து ரூபா 1,779,320 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அது மொத்த நிதியேற்பாட்டில் 20 சதவீதமான அளவாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 8,494,483 தொகை மருத்துவ உதவிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததெனினும், மருத்துவ உதவிகளை கோரும் நலனாளிகளின் தகவல்களடங்கிய தரவு முறைமையினை நாளதுவரையாக பேணியிராததுடன், நலனாளிகள் தொடர்பில் பின்தொடர் நடைமுறையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 5,000 மூக்குக் கண்ணாடிகளை பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், ரூபா 52,650 பெறுமதியுடைய 81 மூக்குக் கண்ணாடிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் அந்த மூக்குக் கண்ணாடிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குறைந்த வருமானம் பெறும் வீடற்ற ஊனமுடைய நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 300 ஊனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 85,000,000 மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், தேசிய லொத்தர் சபையின் சுபரி வாசனா சம்பத லொத்தர் சீட்டு வருமானத்தில் ரூபா 43,000,000 மாத்திரம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 267 ஊனமுற்றோருக்காக மீளாய்வாண்டில் ரூபா 31,110,356 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் வீடமைப்பு உதவிகளை வழங்கும் பொருட்டு கிடைத்திருந்த பணத்தில் ஆண்டின் இறுதியில் ரூபா 17,999,656 அல்லது 27 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் ஆண்டிறுதியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளை செலுத்த வேண்டியுள்ள ஊனமுற்றோரின் எண்ணிக்கை முறையே 114,296 மற்றும் 401 ஆக இருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 750 தொகையான போக்குவரத்துப் படியொன்றினை வழங்குவதற்கு திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தகைமையுடைய 10,502 ஊனமுற்ற மாணவர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் 4,706 ஊனமுற்ற மாணவர்களுக்கு மாத்திரம் இரண்டு மாதங்களுக்கான போக்குவரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவனத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 26 பேராக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 15 ஆகும். அதன் பிரகாரம், 11 பதவி வெற்றிடங்கள் நிலவின. அந்த வெற்றிடங்கள் நிலவிய காரணத்தால் அதிகாரச்சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட பெரும்பாலான செயற்பணிகளை நிறைவேற்றத் தவறியமைக்கு அதன் மூலம் தடையொன்று இல்லையென கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதன் பிரகாரம், நிதி

முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பாதீட்டினைப் பயன்படுத்தல் தொடர்பில் மன்றத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட பின்வரும் கட்டளைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுலாக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பொது முயற்சிகள் குழு கட்டளை இலக்கம் | கட்டளைகள் |
|---|---|
| 05 | ஊனமுற்றோர்களின் செயலகத்தினால் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஊனமுற்றோர்களின் உரிமைகள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் வரைவு ஐக்கிய நாடுகளின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டதா என அமைச்சருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல். |
| 06 | நாட்டில் உயிர் வாழ்கின்ற ஊனமுற்றோர்களின் அண்மைக்கால தகவல்கள் தொடர்பான தரவு வங்கியொன்றைப் பேணிச் செல்வதற்குரிய வழிமுறைகள் தொடர்பான அறிக்கையொன்றினை குழுவிற்கு வழங்குதல். |
| 08 | ஊனமுற்றோருக்கான பாடசாலைகளை, கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல்.<br>(அ) ஊனமுற்றோருக்கு விஷேட கல்வி வசதிகளை வழங்குவதற்காக நாடு முழுவதும் 25 பாடசாலைகளை உருவாக்குதல்.<br>(ஆ) இந்தப் பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வசதிகளை ஏற்படுத்தல்.<br>(இ) ஆசிரியர்களுக்கு எவ்வாறு பயிற்சிகளை வழங்குதல்.<br>(ஈ) ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் இயலுமை தொடர்பில் ஆராய்தல் மற்றும்<br>(உ) கல்வி அமைச்சின் கீழ் இந்தப் பாடசாலைகளைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம் |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | உதவுதொகைகளை முறைப்படி கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | முறைப்படி பதவியணி வெற்றிடங்களை நிரப்பாமை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (I). தகைமையுடைய ஊனமுற்றோருக்கு உரிய பிரகாரம் உதவிகள் கிடைக்காமை.<br>(II). உதவுதொகைப் பதிவேடுகளைப் பேணாமை. |